1996 ஆகஸ்ட் *20*]

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல், அருள்மிகு கோனேஸ்வரஸ்வாமி திருக்கோயில் கிழக்கு மற்றும் தெற்கு மதில் சுவர் இடிந்துள்ளதால் அதனைக் கட்ட அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :

மேற்படி திருக்கோயிலின் இடிந்துள்ள கிழக்கு மற்றும் தெற்கு மதில் சுவரினை பழுதுபார்த்தலுக்கான செயற்குறிப்பு இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

45--

மேல்மலையனூர் கோவிலில் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் *886*--டாக்டர் ஆ. ஞானசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், மேல்மலையனூரில் உள்ள அம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :

இந்து திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு ஏற்கனவே *11* அறைகள் கொண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவைகளில் மூன்று அறைகள் நவீன வசதிகள் கொண்டவையாக உள்ளன. இவைகள் தவிர திருக்கோயில் உள்பிரகாரத்தில் *10* அறைகள் உள்ளன. இந்த திருக்கோயில் சார்பாக நவீன வசதிகளுடன் மேலும் *60* அறைகள் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS